GNANA BHAKTAMITRAN
Pastor and Evangelist
Evangelical Bible Assembly
Madurai, India







# இயேசுக்கிறிஸ்துவின் சுவிசேஷம்
# பாடம் - 1

இந்த அண்டசராசரங்களையும் மனிதகுலத்தையும் படைத்த தேவாதி தேவனே இந்த வேதாகமத்தையும் அதிலுள்ள அதிமுக்கியமான செய்தியையும் உலகிற்குக் கொடுத்திருக்கிறார். அதில்தான் உலகத்தை இரட்சிக்க வந்த இயேசுக்கிறிஸ்துவைக் குறித்த நற்செய்தி அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைக் குறித்த உபதேசத்தின் சுருக்கமே இந்த தியானம்.

## வேதாகமம் என்பது என்ன?

இலக்கிய உலகில் எழுதப்பட்டிருக்கும் புத்தகங்களிலேயே மிகவும் சிறந்ததாக காணப்படுவது வேதாகமமாகிய இந்தப் புத்தகமே. அதனுடைய தன்மைக்கும், அது எழுதப்பட்டிருக்கும் விதத்திற்கும், அது எழுதப்பட்டிருப்பதின் நோக்கத்திற்கும் சமானமாக எந்த புத்தகமும் அதன் அருகில்கூட வர முடியாது. ஆனால் விசுவாசிகளாகிய நாம், இந்தக் காரணங்களுக்காக பெருமை அடைவதைக் காட்டிலும், அதனுடைய ஆவிக்குரிய தன்மைகளுக்காகவும், ஒரே கடவுளின் வார்த்தையாக அது விளங்குகிறது என்பதற்காகவும் மிகவும் பெருமிதம் அடைகிறோம்.

ஆனால் உலகமோ இந்தப் புத்தகத்திலுள்ள ஆவிக்குரிய மிகமுக்கிய உபதேசங்களை நம்பாமல், இதில் இலக்கிய நயத்தை மேன்மைப்படுத்துவதோடு நிறுத்திக் கொண்டது. அதைக் குறித்து நம்மால் ஒன்றுஞ் செய்யக்கூடாது. உலகம் அதை ஏற்றுக் கொள்ளாது என்பதைக் குறித்து அந்த வேதாகமமே கீழ்க்கண்டவாறு கூறுகிறது **அவர் உலகத்தில் இருந்தார். உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை** யோவா 1:10. விசனிக்கத்தக்கதான உண்மைதான் இது.

இதுவரை எழுத்துவடிவில் வெளிவந்த புத்தகங்களிலேயே மிகவும் பழமையானது இந்த வேதாகமம்தான். கோடெக்ஸ் சினாடிக்கஸ்(Codex Sinaticus), கோடெக்ஸ் வாடிகேனஸ்(Codex Vaticanus) ஆகிய வடிவங்களில் இவை வெளியிடப்பட்டு பாதுகாக்கப்பட்டிருக்கிறது. இந்த பழமையான புத்தகத்தை லண்டனிலுள்ள மியூசியத்தில் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். முதன்முதலாக அச்சிடப்பட்ட குடன்பர்க்(Gutenberg Bible ) பைபிளின் சில பக்கங்களை வாஷிங்டன் டிசி(Washington D.C) மியூசியத்தில் காணும் வாய்ப்பையும் பெற்றேன். இவைகளை விலைமதிப்பிட முடியாத பொக்கிஷமாக அந்த அருங்காட்சியகங்களில் பாதுகாத்து வருகிறார்கள். இந்த அளவுக்கு வேறு எந்த புத்தகமும் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கவில்லை. இது தற்செயலாக நிகழ்ந்த ஒரு காரியமல்ல, கடவுளின் இரகசியங்களை வெளிப்படுத்துகிற இந்த புத்தகம், மனிதகுலத்தாருக்குக் கடவுளாலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது.

கடவுள், உலகிலுள்ள அனைவருக்குமே இப்புத்தகத்தின் மூலம் தன்னை அறிமுகப்படுத்தியிருந்தும், வெகுசிலரே இந்தப் புத்தகத்தைப் பற்றி அக்கறை காட்டுகிறார்கள். முழுஉலகமும் வேறொரு மாபெரும் சக்திக்கு அடிமையாகிக் கிடக்கிறது. இந்த சக்தி, கடவுளுடைய அதிகாரத்திற்கு அடங்கினதாய் இருந்த போதிலும் அது கடவுளையே எதிர்க்கிற தீய சக்தியாக இருக்கிறது. கடவுளும் சில காரணங்களினால் இதை அழிக்காமல் விட்டு வைத்திருக்கிறார். கடவுளின் உதவியில்லாமல் ஒருவனாலும் இந்த தீயசக்தியின் விஷத்தன்மைக்கு தப்பித்துவிட முடியாது.

அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பா முதலான நாகரீக நாடுகள் ஒருகாலத்தில் அநாகரீகமாக இருந்திருக்கிறதை சரித்திரத்தில் இருந்து அறிந்து கொள்ளலாம். இப்போது இவ்வித முன்னேற்றம் அடைந்ததற்கு ஆதிகாரணம் இவ்வேதாகமப் புத்தகமே என்றால் மிகையாகாது. தவிர, ஒருகாலத்தில் மனிதர்களையே கொன்று தின்னும் வழக்கமுடைய பல நாட்டினரை முற்றிலுமாக மாற்றியது இந்த வேதாகமமே. ஆப்பிரிக்கா, இந்தோனேசியா, போன்ற இடங்களிலுள்ளவர்கள் நரமாமிசம் சாப்பிடுபவர்களாயிருந்ததை முற்றிலுமாக மாற்றி அவர்களை நல்வழிப்படுத்தியது இந்த புத்தகம். இந்த புத்தகம் கூறுகின்ற கருத்துக்களைப் பின்பற்றுகிறவர்களே உலகில் பெரும்பான்மையாக இருக்கிறார்கள் என்று ஒரு புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.

இந்த புத்தகத்தில் அநேக சிறப்புகள் உள்ளன. அதில் ஒன்று இதில் கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்களும் அவைகளின் நிறைவேறுதலுமாகும். இதற்கு உதாரணமாக, நிறைவேறியிருக்கும் தீர்க்கதரிசனங்களில் சிலவற்றை குறித்த வசனங்களை இந்த தியானத்தின் கடைசியில் சேர்க்கப்பட்டிருக்கிறதைக் காணவும்.

### வேதாகமத்தின் மத்திப செய்தி யாது?

நாம் முன்னரே சொன்னபடி, சர்வ வல்லவராகிய கடவுள் தமது குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவைக் கொண்டு இந்த உலகத்தின் மக்களுக்கு அறிவித்திருக்கும் செய்திதான் இந்த வேதாகமத்தில் இருக்கிறது. உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும், மகிமையான இடமாகிய மோட்சத்திற்குப் போயிருக்க வேண்டியது. ஆனால் அச்சந்தர்ப்பத்தை இழந்து இங்கே ஜீவித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த வேதப்புத்தகத்தின் மூலமாகத்தான் நாம் அறிகிறோம். அப்படியாக நம்முடைய அந்த வாய்ப்பை இழக்க வைத்தது சாத்தானின் நயவஞ்சகமான திட்டம் என்பதும், ஆதிப் பெற்றோரிடமே தன் விஷத்தன்மையை அவன் புகுத்தி விட்டானென்பதையும் நாம் இந்த வேதாகமத்தின் மூலமாகத்தான் அறிந்து கொள்ளுகிறோம். அவர்களின் வீழ்ச்சியின் மூலமாக அவர்களின் சந்ததியில் வரும் அனைவருக்குமே பாவம் ஏற்பட்டுவிட்டது. அவர்கள் மோட்சலோக வாய்ப்பை இழந்தது மாத்திரமல்லாமல், நித்திய நித்தியமாக அக்கினிக் கடலுக்குள் இருக்க வேண்டியதான நிலமைக்கும் சபிக்கப்பட்டார்கள்.

கடவுள் தாம் படைத்த மனிதர்களை மிகவும் நேசித்தார். ஆனால் சாத்தானின் வஞ்சனையினால் ஆதிப்பெற்றோர் மூலமாக மனிதர்களிலும் உலகத்திலும் ஏற்பட்டுவிட்ட கறையை நீக்க வழியில்லாமல் போனது. அந்த பாவக்கறையை ஒரே வார்த்தையினால் அவரால் நீக்கிவிட முடியாது. ஏனென்றால் மனிதர்களிடம் அத்தகைய கறையை ஏற்படுத்தியது சாதாரணப்பட்ட ஆள் அல்ல. ஒரு காலத்தில் தெய்வீகத் தன்மையோடிருந்த லூசிபர் என்கிற தேவதூதன், சாத்தானாக மாறியபின் ஏற்படுத்திய விஷக்கறை அது. அது மாத்திரமல்ல, அந்த கறையும் சாதாரணமான ஒரு சிருஷ்டிப்பிடம் ஏற்பட்டுவிடவில்லை. கடவுளின் சாயலாகவே உருவாக்கப்பட்டிருந்த உன்னதமாகிய மனிதனிடம் அது ஏற்பட்டுவிட்டது. ஆகவே அதை போக்குவது அப்படியொன்றும் சுலபமானதல்ல. உதாரணமாக ஒரு வெறிநாய் மனிதனைக் கடித்துவிட்டதாக வைத்துக் கொள்ளுவோம். அப்படி கடிபட்டவன் பிழைப்பது கடினம் என்பதை நாம் அறிவோம். அவன் செத்துப் போவது நிச்சயம் என்பது மாத்திரமல்ல, அவன் மூலமாக அந்த கொடிய விஷத்தன்மை மற்றவர்களுக்கும் வரக்கூடும் என்பதையும் அறிவோம். அதேகதிதான் மனிதருக்கு ஏற்பட்டுவிட்டது. ஆகவேதான் கடவுள் மிகவும் ஞானமாக, அந்த ஆதிப் பெற்றோரை ஒரு தற்காலிகமான இடத்தில் வைத்தார்.

அந்த கறை ஏற்பட்டதால் முழுஉலகமும் கெட்டுவிட்டது. கடவுள், முழு உலகத்தையும், அண்டசராசரங்களையுங்கூட அழித்துவிட சித்தங்கொண்டார். ஆனால் அதற்கு முன்னதாக அவர் மனிதகுலம் முழுவதையும் காப்பாற்ற வேண்டுமென ஆவல்கொண்டார். பாவம் என்கிற பயங்கரமான விஷத்தினால் பாதிக்கப்பட்டிருந்தது மனிதகுலம். குணப்படுத்த முடியாத நிலையில் அவர்கள் இருந்தார்கள். அது ஒரு கொடிய ஆவிக்குரிய வியாதி. அதை எந்த மருந்தாலும் குணப்படுத்த முடியாது. அதன் தன்மை யாதென்று இப்போது நமக்கு விளங்காது. ஆனால் மோட்சத்தை அடைந்தபின்னர் ஒருவேளை கடவுளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். ஆகவே கடவுள் ஒரு பிரத்தியேகமானதும், மிக அபூர்வமானதுமான ஒரு ஏற்பாட்டை செய்தார். அதன் மூலமாக மனிதர்கள், (1) நித்திய தண்டனைக்குத் தப்பித்துக் கொள்ளலாம் (2) அவர்கள் இழந்து போயிருந்த மகிமையைத் திரும்பவும் பெற்றுக் கொள்ளலாம்.

சர்வ வல்லவராகிய கடவுளுக்கு தம்முடைய ஒரே பேறான குமாரனை பலியிடுவதைத் தவிர்த்து வேறு வழி தெரியவில்லை. அவரை உலகத்தில் ஒரு மனிதனாகப் பிறக்க வைத்து, அவர் மூலமாக, அழியப் போகும் பூமியிலுள்ள மனிதர்களைக் காப்பாற்றுவது அவருடைய சித்தமாயிருந்தது. ஆகவே அவர் இவ்வுலகத்தில் வந்தார். மனிதனாக வாழ்ந்தார். கொடூரமான ரோமசிலுவையில் அறையப்படும்படிக்கு தம்மையே ஒப்புக் கொடுத்தார். தேவகுமாரன் தன் பிதாவுக்குக் கீழ்ப்படிந்தவராக, உலகத்தாரின் பாவம் முழுவதையும் தம்மீது சுமந்தவராக தம்மையே கிருபாதார பலியாக ஒப்புக் கொடுத்தார். இப்படி நிகழநேர்ந்தது ஆச்சரியமாகவும், நமக்கு மிகுந்த அதிர்ச்சியைத் தருவதாகவும் இருக்கிறது. மனிதகுலம் மீது வரவிருக்கும் ஆபத்துகளுக்கு அவர்களை தப்புவிக்க இந்த ஒருவழிதான் அவருக்கு இருந்தது. இதைவிட விசனிக்கத்தக்க காரியம் என்னவென்றால், அவர் மனிதர்களைத் தப்புவிப்பதற்காக ஏற்படுத்திய இந்த இரட்சிப்பின் திட்டத்தை வெகு சொற்பமானவர்கள்

மாத்திரமே விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறார்கள். ஆகவே கடவுளுக்கு, இந்த உலகத்தையும், சாத்தானையும், அவர் திட்டத்திற்குள் வராதவர்களையும் அழிப்பதைத் தவிர்த்து வேறுவழியில்லை.

மனிதர்களை அழிப்பதென்பது வெறுமனே மரித்துப் போவது மாத்திரமல்லை, நித்திய நித்தியமாக அக்கினிக்கடலிலே சாத்தானோடே வெந்து கொண்டிருப்பதாகும். அவர்கள் அங்கே மரிக்க மாட்டார்கள்; மரிக்கவும் முடியாது. தொடர்ந்து பாடு அனுபவிப்பார்கள். இதனால் கடவுள் இரக்கமற்றவர் என்று நாம் கூறிவிட முடியாது. இம்மாதிரியான இக்கட்டான நிலையை மனிதர்கள்தான் ஏற்படுத்திக் கொண்டார்கள். தேவசாயலாக உருவாக்கப்பட்டிருக்கும் மனிதர்களை, மிருகம், பறவைகள் போல அழித்துவிட முடியாது. அவனுக்கு இரண்டே வழிகள்தான் இருக்கிறது: 1) அவன் கடவுளால் மீட்கப்பட்டு, அழியாமையை அடைவது, அல்லது (2) சாத்தானோடு அக்கினிக்கடலில் தள்ளப்பட்டு, சாகவும் முடியாமல், சதாகாலமும் அதனை சகித்துக் கொண்டே வாழ்வது. இவைகளைத் தவிர்த்து மூன்றாவதாக எந்த வழியும் இல்லை. மனிதர்கள் கெட்டுப் போய் இந்த விதமாக அழிவை அடைவதில் கடவுளுக்கு சிறிதும் விருப்பமில்லை. எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்பதையே அவர் விரும்புகிறார். இதில் ஆச்சரியப்படத்தக்க விஷயம் என்னவென்றால், வேதாகமத்தின் மூலமாக, அவரிடம் வருவதற்கு கடவுள் விடுக்கும் அழைப்பை ஏற்றுக் கொண்டு அவரிடம் வருகிறவர்கள் வெகு சொற்பமான பேர்கள்தான். பெரும்பாலான ஜனங்கள் அவருடைய அழைப்பை அலட்சியப்படுத்துகிறார்கள்.

நான் உங்களுக்குக் ஏற்கனவே கூறியிருக்கிறேன், யார் வேண்டுமானாலும் படித்து விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் வேதாகமம் எழுதப்படவில்லை. அப்படியானால் அவர் மனிதகுலத்திற்கு அறிவிக்கும் நற்செய்தியை யாரால்தான் விளங்கிக் கொள்ள முடியும் என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். இதற்கு விடை என்னவென்றால், வேதாகமத்தில், இரட்சிப்பைக் குறித்த ஆரம்ப சிலபகுதிகளில் மட்டும் எல்லாராலும் விளங்கிக் கொள்ளத் தக்கதாக எழுதப்பட்டிருக்கிறது. இதைக் கற்றுத் தெரிந்ததும் பரிசுத்தஆவியின் அபிஷேகம் பெற்ற ஒரு ஆசிரியரை அணுகும்படி கடவுள் அவனுக்கு வழிகாட்டுவார். அதில் ஒன்றிரண்டு வசனங்கள் (Appendix 2) இதன் கடைசியில் சேர்க்கப்பட்டிருக்கிறது.  இந்த மாதிரியான வசனங்களுக்கு ஜனங்கள் செவிசாய்த்து, அதன்படி செய்வார்களானால், கடவுள் மேற்கொண்டு அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டியதை தெரிவிப்பார். இல்லையென்றால் அவர் மேற்கொண்டு அவர்களுக்கு ஒன்றும் சொல்லித்தர மாட்டார். அது மாத்திரமல்ல, அவருடைய சீஷனாக ஆகப்போகிறவன், ஏற்கனவே அவருடைய சீஷனாகியிருக்கும் ஒருவரிடமிருந்துதான் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது அவருடைய சித்தமாயிருக்கிறது. அப்படியாக கற்றுக் கொடுக்கக் கூடிய சீஷனும், போதிக்கும் வரத்தை கடவுளிடமிருந்து பெற்றவனாயிருப்பான். இப்படிப்பட்டவர்களைத்தான் பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்ற ஆசிரியர் என்று மேலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## பெயர் கிறிஸ்தவ சபைகளில் சாத்தானின் ஆதிக்கம்

இப்படித்தான் இருக்கிறது என்று நாம் ஏன் நினைக்க வேண்டும்? நாம் அப்படி நினைப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.

அதற்குரிய காரணங்களில் ஒன்று, நாம் கடைசி நாட்களில் இருக்கிறோம் (எபி 1:2). இந்த உண்மையைக் கருத்தில் கொண்டவர்களாக நாம் இதை கவனிக்கலாம். சுவிசேஷப் புத்தகம் ஒன்றில் நாம் ஒரு வித்தியாசமான வசனத்தைக் காண்கிறோம்: **. . . ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது, பூமியில் விசுவாசத்தைக் காண்பாரோ?**. . . லூக் 18:8. அதே புத்தகத்தின் முந்தின அதிகாரத்தில், ஜனங்கள் சற்றும் எதிர்பார்த்திராத சமயத்தில் மனுஷகுமாரன் வருவார் என்பதை கர்த்தர் முன்னதாகவே அறிவிக்கிறார்(லூக் 17:26-27). இன்னொரு வசனத்தின் மூலமாகவும் நாம் இந்த உண்மைகளை நன்றாக அறிகிறோம்: **மேலும் கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக . . . எப்படியெனில் மனுஷர்கள் . . . தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து, அதின் பலனை மறுதலிக்கிறவர்களாய் இருப்பார்கள். .** 1தீமோ3:1,5

சாத்தான் சபைகளை தனது ஆதிக்கத்துக்குள் கொண்டு வந்துவிட்டது என்று நாம் கூறுவதற்கு மற்றொரு காரணமும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து கூறிய ஒரு முக்கியமான வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது: **ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்** மத் 7:14. கடைசிகாலம் நெருங்க நெருங்க மேற்கூறிய அடையாளங்கள் அதிகமாகிக் கொண்டே போகும். இந்த வசனங்களைப் படித்ததால், நான், சபைகள் சாத்தானுடைய ஆதிக்கத்துக்குள் வந்துவிட்டன என்று கூறவில்லை. அதற்கு மாறாக, அநேக ஆண்டுகளாக நான் நடந்து வந்த ஆவிக்குரிய பாதையில் இவைகளையெல்லாம் கண்கூடாக சபைகளில் பார்த்து அதிர்ச்சியடைந்தேன். அதன்பிறகுதான், இவைகளைப் பற்றியெல்லாம் வேதாகமம் என்ன கூறுகிறது என்பதை வேதாகமத்தில் ஆராய்ந்து பார்த்த போது, இப்படியெல்லாம் சம்பவிக்க இருப்பதை வேதாகதமத்தின் மூலமாகவே தெரிந்து கொண்டேன்.

அப்படியானால், **. . இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற் கொள்வதில்லை** (மத் 16:18) என்று கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து உறுதியளித்தது பொய்யாகப் போயிற்றா என்ற கேள்வி வரலாம். இல்லவே இல்லை. அவர் கொடுத்த உறுதிமொழி இன்றும் ஒரு மலையைப் போல உறுதியாகத்தான் இருக்கிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக இயேசுவாகிய கற்பாறையின் மீது கட்டப்பட்ட சபை, பல இடையூறுகளையும் கடந்து, இரத்தசாட்சிகளாக மரிக்க நேர்ந்த காலங்களிலும் தொடர்ந்து நிலைநின்று கொண்டுதான் இருக்கிறது. சபையின் சரித்திரத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, கடவுளின் பரிசுத்தமான சபை எல்லா காலகட்டங்களிலும் இருந்து கொண்டுதான் இருந்திருக்கின்றது என்று நாம் நம்புவதற்கு இடமிருக்கிறது. ஆனால் கடைசி காலம் நெருங்க நெருங்க உண்மையான சபையின் அங்கத்தினரின் எண்ணிக்கை குறுகிக் கொண்டேதான் வந்திருக்கிறது. இவைகளையெல்லாம் வைத்துப்

பார்க்கும்போது, எண்ணிறந்த சபைகளை சாத்தான் தன்வசம் ஆக்கிக் கொண்டுவிட்டதற்குக் காரணம், சபையை விழுங்குவது சாத்தானுக்கு லேசானதாக இருப்பதால் அல்ல, மனிதர் உண்மையான சபையில் தரித்திராமல் வழிதப்பிப் போய் அழிந்துபோகும் ஆடுகளைப்போல் சிதறிப்போய்க் கொண்டிருப்பதாலேயே. உண்மையான சபைகள் அழிவதில்லை.

இவைகளை அறிந்து கொண்ட நாம், இந்த சந்தர்ப்பத்தில் மற்ற சபைகளின் மீது குற்றங் கண்டுபிடிப்பதை விட்டுவிட்டு, நாம், சரியான பாதையில்தான் போய்க் கொண்டிருக்கிறோமா என்பதை தற்சோதித்துக் கொள்ள வேண்டும். கடவுள் தமது ஊழியர்களைக் கொண்டு, ஒருவனுக்கு ஒரு படியைக் காண்பித்த பிறகு, அவன் மேற்கொண்டு ஆவிக்குரிய பாதையில் இன்னும் முன்னேறிச் செல்ல வேண்டுமேயொழிய, அந்த அளவிலேயே நின்று கொண்டு திருப்தியடைந்துவிடக்கூடாது. ஏனென்றால் நாம் இந்த உலகத்தில் இருக்கும் வரைக்கும், நமது நிலமை பூரணமானதல்ல; மேலும் முன்னேறிக் கொண்டேயிருக்க வேண்டிய நிலையில்தான் நாம் இருக்கிறோம். பூரணத்தை நோக்கி நமது வாழ்நாள் முழுவதுமாக முன்னேறிக் கொண்டேயிருக்க வேண்டும். சில நூற்றாண்டுகளுக்கு முன்னதாக வாழ்ந்த ஞா.சாமுவேல் போன்ற பக்தர்களைக் காட்டிலும் நமக்கு இன்று ஒருவேளை தேவன் அதிகமாக ஆவிக்குரிய காரியங்களை வெளிப்படுத்தியிருக்கலாம். ஆனால், அதனால் நாம் பரிபூரணம் அடைந்துவிட்டதாக எண்ணிக் கொள்ளக்கூடாது. அந்த பரிசுத்தவான்கள் செய்ததைப் போன்றே நாமும் தொடர்ந்து பூரணத்தை நோக்கி முன்னேறிச் செல்ல பிரயாசைப்பட வேண்டும். ஒரு சபை எப்போது வளர்ச்சியில்லாமல் ஒரே நிலையிலேயே இருக்கிறதோ, அப்போது பாவமும், சாத்தானும் அந்த சபையை மேற்கொண்டுவிட்டதாக நாம் கூறலாம் (ஆதி 4:7).

---

நவீன்-சிந்தியா ஆகியோருக்கு ஏப்ரல் 15,2007ல் பிரசங்கித்த தியானத்தின் சுருக்கம்

Appendix - 1

# தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதல்

| தீர்க்கதரிசனம் | | நிறைவேறுதல் |
|---|---|---|
| தானி 9:25 இப்போதும் நீ அறிந்து உணர்ந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், எருசலேமை திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவதுமுதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழு வாரமும் அறுபத்திரண்டு வாரமும் செல்லும்; அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும்; ஆனாலும் இடுக்கமான காலங்களில் இப்படியாகும் | பிறப்பின் காலம் | லூக் 2:1-2 அந்நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்படவேண்டுமென்று அகஸ்துராயனால் கட்டளை பிறந்தது. சீரியா நாட்டிலே சிரேனியு என்பவன் தேசாதிபதியாயிருந்தபோது இந்த முதலாம் குடிமதிப்பு உண்டாயிற்று. (2:3-7) |
| ஏசா 7:14 ஆதலால் ஆண்டவர்தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள் | கன்னியின் மூலமாக பிறப்பு | மத் 1:18 இயேசுக்கிறிஸ்துவினுடைய ஜனனத்தின் விவரமாவது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடிவருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினால் கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது. |
| எரே 31:15 ராமாவிலே புலம்பலும் கசப்பான அழுகையுமாகிய கூக்குரல் கேட்கப்பட்டது. ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, தன் பிள்ளைகள் இல்லாதபடியால் அவைகளினிமித்தம் ஆறுதல் அடையாதிருக்கிறாள் என்று கர்த்தர் சொல்லுகிறார். | குழந்தைகள் கொல்லப்படுதல் | மத் 2:16-18 அப்பொழுது ஏரோது, தான் சாஸ்திரிகளால் வஞ்சிக்கப்பட்டதைக் கண்டு, மிகுந்த கோபமடைந்து, ஆட்களை அனுப்பி, தான் சாஸ்திரிகளிடத்தில் திட்டமாய் விசாரித்த காலத்தின்படியே, பெத்லகேமிலும், அதன் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண் பிள்ளைகளையும் கொலை செய்தான். (மத் 2:17-18) |
| ஓசி 11:1 இஸ்ரவேல் இளைஞனாயிருந்த போது நான் அவனை நேசித்தேன்; எகிப்தில் இருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன். | எகிப்துக்கு தப்பியோடுதல் | மத் 2:14 அவன் எழுந்து, இரவிலே பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்குப் புறப்பட்டுப் போய் ஏரோதின் மரணபரியந்தம் அங்கிருந்தான். |
| ஏசா 9:1-2 ஆகிலும் அவர் செபுலோன் நாட்டையும், நப்தலி நாட்டையும் இடுக்கமாய் ஈனப்படுத்தின முந்தின காலத்தில் இருந்ததுபோல் அது இருண்டிருப்பதில்லை; ஏனென்றால் அவர் கடற்கரையருகிலும், யோர்தான் நதியோரத்திலும் உள்ள புறஜாதியாருடைய கலிலேயாவாகிய அத்தேசத்தை பிற்காலத்திலே மகிமைப்படுத்துவார். இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின்மேல் வெளிச்சம் பிரகாசித்தது. | கலிலேயாவில் ஊழியம் | மத் 4:12-16 யோவான் காவலில் வைக்கப்பட்டான் என்று இயேசு கேள்விப்பட்டு, கலிலேயாவுக்குப் போய், நாசரேத்தை விட்டு, செபுலோன் நப்தலி என்னும் நாடுகளின் எல்லைகளில் இருக்கும் கடற்கரைக்கு அருகான கப்பர்நகூமிலே வந்து வாசம்பண்ணினார். கடற்கரையருகிலும், யோர்தானுக்கு அப்புறத்திலுமுள்ள செபுலோன் நாடும், நப்தலி நாடும் ஆகிய புறஜாதியாருடைய கலிலேயாவிலே, இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரணஇருளின் திசையில் இருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது என்று ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. |

| | | |
|---|---|---|
| உபா 18:15 உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரில் இருந்து எழும்பப் பண்ணுவார். அவருக்கு செவி கொடுப்பீர்களாக. | தீர்க்கதரிசியாக வந்தவர் | யோவா 6:14 இயேசு செய்த அற்புதத்தை அந்த மனுஷர் கண்டு: மெய்யாகவே இவர், உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி என்றார்கள். (அப் 3:19-26) |
| சங் 110:4 நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார். மனம் மாறாமலும் இருப்பார். | மெல்கிசேதேக் போன்ற ஆசாரியர் | எபி 6:20 நமக்கு முன்னோடினவராகிய இயேசு, மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார் (எபி5:5-6; 7:15-17) |
| ஏசா 53:3 அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாய் இருந்தார். அவரைவிட்டு நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம். அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற் போனோம். | யூதரின் புறக்கணிப்பு | யோவா 1:11 அவர் தமக்கு சொந்தமானதிலே வந்தார். |
| ஏசா 11:2 ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர் மேல் தங்கியிருப்பார். (சங் 45:7, ஏசா 11:3-4) | அவருடைய குணாதிசயங்கள் | லூக் 2:52 இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார். (லூக் 4:18) |
| சக 9:9 சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார். அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும் கழுதையின் மேலும் கழுதைக் குட்டியாகிய மறியின் மேலும் ஏறி வருகிறவருமாய் இருக்கிறார். (ஏசா 62:11) | வெற்றிவேந்தராக பிரவேசம் | யோவா 12:13-15 குருத்தோலைகளைப் பிடித்துக் கொண்டு, அவருக்கு எதிர்கொண்டு போகும்படி புறப்பட்டு: ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்தரிக்கப்பட்டவரு என்று ஆர்ப்பரித்தார்கள். அல்லாமலும்: சீயோன் குமாரத்தியே, பயப்படாதே, உன் ராஜா கழுதைக்குட்டியின்மேல் ஏறிவருகிறார் என்று எழுதியிருக்கிறபிரகாரமாக, இயேசு ஒரு கழுதைக் குட்டியைக் கண்டு அதின்மேல் ஏறிப்போனார். (மத்21:1-11, யோவா 12:12) |
| சங் 41:9 என் பிராண சிநேகிதனும், நான் நம்பினவனும், என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும், என் மேல் தன் குதிகாலைத் தூக்கினான். | சிநேகிதனால் காட்டிக்கொடுக்கப் படுதல் | மாற் 14:10 அப்பொழுது பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து என்பவன் அவரைப் பிரதான ஆசாரியருக்குக் காட்டிக்கொடுக்கும்படி அவர்களிடத்திற்குப் போனான். (மத்26:14-16, மாற் 14:43-45) |
| சக 11:12 உங்கள் பார்வைக்கு நன்றாய்க் கண்டால், என் கூலியைத் தாருங்கள்; இல்லாவிட்டால் இருக்கட்டும் என்று அவர்களுடனே சொன்னேன். அப்பொழுது எனக்குக் கூலியாக முப்பது வெள்ளிக்காசை நிறுத்தார்கள். (சக 11:13) | முப்பது வெள்ளிக் காசுக்கு விற்கப்படுதல் | மத் 26:15 நான் அவரை உங்களுக்குக் காட்டிக்கொடுக்கிறேன். நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்றான். அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசைக் கொடுக்க உடன்பட்டார்கள். (மத் 27:3-10) |

| | | |
|---|---|---|
| சக 11:13 கர்த்தர் என்னை நோக்கி: அதைக் குயவனிடத்தில் எறிந்துவிடு என்றார்; இதுவே நான் அவர்களால் மதிக்கப்பட்ட மேன்மையான மதிப்பு; நான் அந்த முப்பது வெள்ளிக்காசை எடுத்து, அவைகளைக் குயவனுக்கென்று கர்த்தருடைய ஆலயத்திலே எறிந்துவிட்டேன். | காசை குயவனுடைய நிலத்தை வாங்க கொடுத்துவிடுதல் | மத் 27:6-7 பிரதான ஆசாரியர் அந்த வெள்ளிக்காசை எடுத்து: இது இரத்தக்கிரயமானதால், காணிக்கைப் பெட்டியிலே இதைப் போடலாகாது என்று சொல்லி, ஆலோசனை பண்ணினபின்பு, அந்நியரை அடக்கம் பண்ணுவதற்குக் குயவனுடைய நிலத்தை அதினாலே கொண்டார்கள். |
| சங் 109:7-8 அவன் நியாயம் விசாரிக்கப்படும்போது குற்றவாளியாகக் கடவன்; அவன் ஜெபம் பாவமாகக் கடவது. அவன் நாட்கள் கொஞ்சமாகக் கடவது. அவன் உத்தியோகத்தை வேறொருவன் பெறக்கடவன். | யூதாஸின் ஊழியத்தை வேறொருவன் பெறுதல் | அப் 1:18-20 அநீதத்தின் கூலியினால் அவன் ஒரு நிலத்தை சம்பாதித்து, தலைகீழாக விழுந்தான். அவன் வயிறு வெடித்து, குடல்களெல்லாம் சரிந்து போயிற்று. இது எருசலேமிலுள்ள குடிகள் யாவருக்கும் தெரிந்திருக்கிறது. அதினாலே அந்த நிலம் அவர்களுடைய பாஷையினாலே இரத்தநிலம் என்று அர்த்தங்கொள்ளும் அக்கெல்தமா என்னப்பட்டிருக்கிறது. சங்கீத புஸ்தகத்திலே: அவனுடைய வாசஸ்தலம் பாழாகக்கடவது, ஒருவனும் அதிலே வாசம்பண்ணாதிருப்பானாக என்றும், அவனுடைய கண்காணிப்பை வேறொருவன் பெறக்கடவன் என்றும் எழுதியிருக்கிறது. (அப் 1:16-17) |
| சங் 27:12 என் சத்துருக்களின் இஷ்டத்துக்கு என்னை ஒப்புக் கொடாதேயும். பொய்சாட்சிகளும் ஆக்கிரமித்துச் சீறுகிறவர்களும் எனக்கு விரோதமாய் எழும்பியிருக்கிறார்கள். | அவரைக் குற்றப்படுத்தின பொய்சாட்சிகள் | மத்26:60-61 ஒருவரும் அகப்படவில்லை; அநேகர் வந்து பொய்சாட்சி சொல்லியும் அவர்கள் சாட்சி ஒவ்வவில்லை. கடைசியில் இரண்டு பொய்சாட்சிகள் வந்து: தேவனுடைய ஆலயத்தை இடித்துப் போடவும், மூன்று நாளைக்குள்ளே அதைக் கட்டவும் என்னாலே ஆகும் என்று இவன் சொன்னான் என்றார்கள். |
| ஏசா 53:7 அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார்; ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும் அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். | குற்றஞ் சாட்டப்படுகையில் அமைதலாய் இருந்தார் | மத்26:62-63 அப்பொழுது, பிரதான ஆசாரியன் எழுந்திருந்து, அவரை நோக்கி: இவர்கள் உனக்கு விரோதமாய் சாட்சி சொல்லுகிறதைக் குறித்து நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா என்றான். இயேசுவோ பேசாமலிருந்தார். அப்பொழுது பிரதான ஆசாரியன் அவரை நோக்கி: நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றார். |
| ஏசா 50:6 அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக் கொடுத்தேன். அவமானத்துக்கும், உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை. | அடிக்கப்பட்டார், துப்பப்பட்டார் | மாற் 14:65 அப்பொழுது சிலர் அவர்மேல் துப்பவும், அவருடைய முகத்தை மூடவும், அவரைக் குட்டவும், ஞானதிருஷ்டியினாலே பார்த்துச் சொல் என்று சொல்லவும் தொடங்கினார்கள். வேலைக்காரரும் அவரைக் கன்னத்தில் அறைந்தார்கள். (மாற் 15:17; யோவா19:1-3; 18:22) |
| சங் 69:4 நிமித்தமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் என் தலைமயிரிலும் அதிகமாயிருக்கிறார்கள்; வீணாக எனக்கு சத்துருக்களாகி என்னை சங்கரிக்க வேண்டுமென்றிருக்கிறவர்கள் | காரணமின்றி பகைக்கப்பட்டார் | யோவா 15:23-25 என்னைப் பகைக்கிறவன் என் பிதாவையும் பகைக்கிறான். வேறொருவரும் செய்யாத கிரியைகளை நான் அவர்களுக்குள்ளே செய்யாதிருந்தேனானால், அவர்களுக்குப் |

| | | |
|---|---|---|
| பலத்திருக்கிறார்கள். நான் எடுத்துக் கொள்ளாததை நான் கொடுக்க வேண்டியதாயிற்று (சங் 109:3-5) | | பாவமிராது. இப்பொழுது அவர்கள் என்னையும் என் பிதாவையும் கண்டும் பகைத்தும் இருக்கிறார்கள். முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படிக்கு இப்படியாயிற்று. |
| ஏசா 53:4-5 மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு, நம்முடைய துக்கங்களை சுமந்தார். நாமோ அவர் தேவனால் அடிபட்டு, வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களின் நிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். (ஏசா 53:6,12) | பிறருக்காக பாடுபட வேண்டியதாயிற்று | மத் 8:16-17 அஸ்தமனமானபோது, பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார். அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக் கொண்டு, நம்முடைய நோய்களை சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. |
| ஏசா 53:12 அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தை தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்கு பங்காகக் கொடுப்பேன். பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக் கொள்ளுவார். | பாவிகளோடு சிலுவையில் அறையப்பட்டார் | மத் 27: 38 அப்பொழுது அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும், அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக இரண்டு கள்ளர் அவரோடேகூட சிலுவைகளில் அறையப்பட்டார்கள். |
| சங் 22:16 நாய்கள் என்னை சூழ்ந்திருக்கிறது; பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்து கொண்டது; என் கைகளையும், என் கால்களையும் உருவக் குத்தினார்கள். (சக 12:10) | கைகளிலும் கால்களிலும் குத்தப்பட்டார் | யோவா 20:27 பின்பு அவர் தோமாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார். உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாய் இராமல் விசுவாசியாய் இரு என்றார். (யோவா 19:37, 20:25-26) |
| சங் 22:6-8 நானோ ஒரு புழு; மனுஷனல்ல. மனுஷரால் நிந்திக்கப்பட்டும், ஜனங்களால் அவமதிக்கப்பட்டும் இருக்கிறேன். என்னைப் பார்க்கிறவர்களெல்லாரும் என்னைப் பரியாசம் பண்ணி, உதட்டைப் பிதுக்கி, தலையைத் துலுக்கி: கர்த்தர் மேல் நம்பிக்கையாய் இருந்தானே, அவர் இவனை விடுவிக்கட்டும்; இவன் மேல் பிரியமாயிருக்கிறாரே. இப்பொழுது இவனை மீட்டுவிடட்டும் என்கிறார்கள். | கேலி செய்யப்பட்டார், அவமதிக்கப்பட்டார். | மத் 27:39-40 அந்த வழியாய் நடந்து போகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி: தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே இரட்சித்துக் கொள்; நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையில் இருந்து இறங்கி வா என்று அவரை தூஷித்தார்கள். (மத் 27:41-44; மாற்15:29-32) |
| சங் 69:21 என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள். என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள் | கசப்பான காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள் | யோவா 19:29 காடி நிறைந்த பாத்திரம் அங்கே வைக்கப்பட்டிருந்தது; அவர்கள் கடற்காளானைக் காடியிலே தோய்த்து, ஈசோப்புத் தண்டில் மாட்டி, அவர் வாயினிடத்தில் நீட்டிக் கொடுத்தார்கள். (மத் 27:34,48) |

| | | |
|---|---|---|
| சங் 22:6-8 கர்த்தர் மேல் நம்பிக்கையாய் இருந்தானே, அவர் இவனை விடுவிக்கட்டும்; இவன் மேல் பிரியமாயிருக்கிறாரே. இப்பொழுது இவனை மீட்டுவிடட்டும் என்கிறார்கள். | தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்ட வார்த்தை இங்கே கிண்டலாக சொல்லப்படுகிறது. | மத் 27:43 தன்னை தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன் மேல் நம்பிக்கையாய் இருந்தானே; அவர் இவன் மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள் |
| சங் 109:4 என் சிநேகத்துக்கு பதிலாக என்னை விரோதிக்கிறார்கள். நானோ ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். (ஏசா53:12) | தன்னை விரோதிக்கிறவர்களுக்காக ஜெபம் | லூக் 23:34 அப்பொழுது இயேசு: பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே |
| சக 12:10 நான் தாவீது குடும்பத்தாரின் மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறது போல எனக்காக புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள். | அவரது விலாவிலே குத்தினார்கள் | யோவா 19:34 ஆகிலும், போர்ச் சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்; உடன் இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது |
| சங் 22:18 என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்பேரில் சீட்டுப் போடுகிறார்கள். | போர்வீரர் அவர் உடைக்காக சீட்டுப் போடுகிறார்கள். | மாற் 15:24 அப்பொழுது அவரை சிலுவையில் அறைந்தார்கள். அதன்பின்பு அவருடைய வஸ்திரங்களைப் பங்கிட்டு, ஒவ்வொருவன் ஒவ்வொரு பங்கை எடுத்துக் கொள்ளும்படி அவைகளைக் குறித்துச் சீட்டுப் போட்டார்கள் (யோவா 19:24) |
| சங் 34:20 அவனுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார். அவைகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை. (யாத் 12:46) | ஒரு எலும்பும் முறிக்கப்படக் கூடாது. | யோவா 19:33 அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவர் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய எலும்புகளை முறிக்கவில்லை. |
| ஏசா 53:9 துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக் குழியை நியமித்தார்கள். ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார். அவர் கொடுமை செய்யவில்லை. அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை | ஐசுவரியவானோடே அடக்கம் பண்ண வேண்டியது. | மத் 27:57-60 சாயங்காலமான போது, இயேசுவுக்கு சீஷனும் ஐசுவரியவானுமாயிருந்த யோசேப்பு என்னும் பேர் கொண்ட அரிமத்தியா ஊரானாகிய ஒரு மனுஷன் வந்து, பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான். அப்பொழுது சரீரத்தைக் கொடுக்கும்படி பிலாத்து கட்டளை இட்டான். யோசேப்பு அந்த சரீரத்தை எடுத்து, துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லை புரட்டி வைத்துப் போனான். |

சங் 16:10 என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர். உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர். (மத் 16:21)

அவரது உயிர்த்தெழுதல்

மத் 28:9 . . இயேசுதாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு: வாழ்க என்றார். அவர்கள் கிட்ட வந்து, அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்து கொண்டார்கள்.

சங் 68:18 தேவரீர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களை சிறையாக்கிக் கொண்டு போனீர். தேவனாகிய கர்த்தர் மனுஷருக்குள் வாசம்பண்ணும் பொருட்டு, துரோகிகளாகிய மனுஷருக்காகவும் வரங்களைப் பெற்றுக் கொண்டீர்.

அவர் பரமேறுதல்

லூக் 24:50-51 பின்பு அவர் பெத்தானியா வரைக்கும் அவர்களை அழைத்துக் கொண்டுபோய், தம்முடைய கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களை விட்டுப் பிரிந்து, பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். (அப் 1::9)

Appendix - 2

# சுலபமாக விளங்கிக் கொள்ளக்கூடிய வசனங்கள்

**யோவா 3:16** *தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல், நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.*

**யோவா 5:24** *என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

**அப் 20:21** *தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக் குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தும், நான் யூதருக்கும் கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன்.*

**1யோவா 4:14** *பிதாவானவர், குமாரனை உலகரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம்.*

**1யோவா 5:11** *தேவன் நமக்கு நித்தியஜீவனைத் தந்திருக்கிறார். அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்த சாட்சியாம்.*

**யோவா 4:39,42** *. . . சமாரியரில் அநேகர் அவர்மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள். . . அந்த ஸ்திரீயை நோக்கி: உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள்.*

**1தீமோ 1:15** *பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது. அவர்களில் பிரதான பாவி நான்.*

**2தீமோ 1:9** *அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்.*

**அப் 4:12** *அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் மீட்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை*

**மாற் 16:16** *விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.*

**யோவா 1:12** *அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.*

**யோவா 5:24**

நித்தியஜீவனும் நியாயத்தீர்ப்பும் குமாரன் மூலமாக

*என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

**யோவா 20:31** *இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.*

**கொலோ 1:13** *இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்ஜியத்துக்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம்.*

**அப் 13:38** *ஆதலால் சகோதரரே, இவர் மூலமாய் உங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகுமென்று அறிவிக்கப்படுகிறது*

**1பேது 3:18** *ஏனெனில் கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்.*